கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்
தேனி இருப்பு பெரியகுளம்.
முன்னிலை: திரு. P.கணேசன், B.A., B.L., LL.M.,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி( முழு கூடுதல் பொறுப்பு),
2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**வழக்கிடை விண்ணப்ப எண்.2/2024**

**இன்**

**அசல் வழக்கு எண்.100/2019**

1. K.சிவமணி
2. S.முருகன்
3. K.N.K.முருகன்
4. S.நடுசுப்புலு (இறப்பு)
5. ஆனந்தராஜ்
6. செல்வக்குமார்
7. R.ஜெயக்குமார்
8. R.கன்னையன்
9. குருசாமி
10. ரூபாஷினி
11. வெண்முருகன்
12. விஜயா
13. ராஜாமணி
14. ரஞ்சிதா
15. சென்றாயன்
16. ஊஞ்சாலை
17. அன்பரசன் – மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

K.சுபாஷினி – எதிர்மனுதாரர் / வாதி

இம்மனு என்முன் 15.03.2024 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.முருகேசன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 17 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ஜான்மோகன்தாஸ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்..

## ஆணையுரை

தற்காலிக செயலுறுத்துக்கட்டளை கோரி மனு உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 39 விதி 1–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம் பின்வருமாறு**

எதிர்மனுதாரர் / இந்த வாதியானவர் சமூகம் நீதிமன்றத்தில் OS No.100/2019 என்ற வழக்கை தாக்கல் செய்துவிட்டு, மேற்படி வழக்கை பிரிவினையில்லாத பொது சொத்து தனக்குரிய பாகத்தை பிரித்து கொடுக்குமாறு ஒரு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து, அவ்வழக்கு இதுநாள்வரை நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் மேற்படி வழக்கு OS No.100/2019 சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வரும்பொழுது இவ்வழக்கின் வாதியானவர் விரைந்து விசாரணை செய்து முடிக்குமாறு மதுரை உயர்நீதிமன்றத்தில் CRB (T.D) M.D.No.2358/2022 ன்படி உத்தரவு கடந்த 15.01.2023 ன்படி 8 மாதக் காலத்தில் விரைந்து முடிக்குமாறு உத்தரவாகி உள்ளது.

வாதியானவர் அசல் வழக்கு OS No.100/2019 என்ற வழக்கினையும் உயர்நீதிமன்றத்தில் CRB (T.D) M.D.No.2358/2022 ன்படி உத்தரவு கடந்த 15.01.2023 ன்படி 8 மாதக் காலத்தில் வழக்கு முடிக்குமாறு உத்தரவு பெறப்பட்டதை மறைத்து, மேற்படி வாதியானவர், மேற்படி சொத்தில் வில்லங்கம் உருவாக்கப்பட வேண்டும் என்பதற்கான கடந்த 09.05.2023 ம் தேதி வேறு மூன்றாம் நபருக்கு குத்தகை ஒப்பந்தப் பத்திரம் பதிவு செய்து கொடுத்துள்ளார். இந்த அசல் வழக்கில் வாதியானவர் ஆவணங்களின்படி கிரயம் பெறப்பட்டது என்றும், அதில் 6 ஏக்கர் 83 செண்டு நிலத்தில் மொத்த விஸ்தீரணம் 21 ஏக்கர் 60 செண்டில் தனக்குரிய பாகமான 6 ஏக்கர் 83 செண்டுக்கு ஓர் முதல்நிலை தீர்ப்பாணை வழங்கும்படி கூறியுள்ளார்,

இந்த வாதியானவர் விசாரணை நீதிமன்றத்தில் எவ்வித உத்தரவு பெறாமல் விசாரணை நீதிமன்றத்தில் பாகவிஸ்தி வழக்கு தாக்கல் செய்துவிட்டு, அந்த வழக்கில் எவ்வித உத்தரவும் பெறாமல் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் W.P. (M.D) No.19495/2023–ன்படி தாக்கல் செய்து மொத்த விஸ்தீரணத்தில் உள்ள 9 சர்வே எண்களில் கூட்டுப் பட்டாவில் கட்டுப்பட்ட நிலத்தை அளவிட செய்து காண்பிக்க மனு செய்ததில் போடிநாயக்கனூர் வட்டாட்சியர் அவர்களுக்கு வருவாய்ததுறை ஆவணங்களின்படி மொத்த விஸ்தீரணத்தை அத்துமால் மட்டும் காண்பிக்க உத்தரவாகி உள்ளது. மேற்படி உயர்நீதிமன்ற ரிட் மனு உத்தரவுப்படி தாவா வழக்கில் கட்டுப்பட்ட மொத்த விஸ்தீரணம் 21 ஏக்கர் 60 செண்டு நிலத்தை மட்டும் அத்துமால் காண்பிக்கப்பட்டது.

மேற்படி வாதியானவர் அத்துமால் காண்பிக்கப்பட்டதை மறைத்து சமூகம் நீதிமன்றத்தில் ஆர்டர் 23 ரூல் 4(1)ன்கீழ் எவ்வித நீதிமன்ற உத்தரவும் பெறாமல் 6 ஏக்கர் 83 செண்டு நிலம் தன் கைவசம் உள்ளதுபோல் காண்பித்து வழக்கு வாபஸ் பெற முயற்சித்து வந்தார். மேற்படி வாதி தாக்கல் செய்த மனுவிற்கு நான் எதிருரை தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கின் வாதியானவர் பிரிக்கப்படாத கூட்டுப்பட்டா சொத்தில் அத்துமீறி நுழைந்து அடியாட்கள் வைத்து மற்றும் அரசியல் கட்சி சேர்ந்தவர்களை வைத்து தாவா நிலத்தில் கற்களை ஊன்றி முள்வேலி அமைத்து 1 முதல் 17 வரையிலுள்ள அசல் வழக்கின் பிரதிவாதிகளை நிலத்திற்குள் நுழையவிடாமல் தடுத்து வருகிறார்கள்.

இது சம்பந்தமாக நான் தேனி மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் அவர்களுக்கு மனு தாக்கல் செய்ததில் உயர்நீதிமன்ற உத்தரவின்படி தாவா நிலத்தில் அத்துமால் மட்டும்தான் காண்பிக்கப்பட்டுள்ளது. தனியாக உட்பிரிவு ஏதும் செய்யப்படவில்லை என கூறிவிட்டார்கள். மனுதாரர் மற்றும் அவரது

வகையாட்கள் அத்துமீறி உள்ளே நுழைந்து முள்வேலி அமைத்து கற்களை ஊன்றி அசல் பிரதிவாதிகளை விவசாய நிலத்திற்குள் நுழையவிடாமல் தடுத்து வருவதை குறித்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், தேனி துணைக் கண்காணிப்பாளர் மற்றும் பழனிசெட்டிபட்டி காவல் ஆய்வாளர் அவர்களுக்கும் புகார் மனு கொடுத்தும் சிவில் வழக்கு என்பதால் நீதிமன்ற உத்தவை பெற்றுவரும்பட்சத்தில் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொடுப்பதாக கூறிவிட்டார்கள்.

மேற்படி அசல் வழக்கில் வாதி மற்றும் அவரது வகையாட்கள் இந்த பிரதிவாதிகளை உள்ளே நுழையவிடாமல் தடுத்து வருவதுடனும், விவசாய நிலத்தில் உள்ள தென்னை மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சாமல் தென்னைமரங்கள் பட்டுப்போகும் நிலையில் இருப்பதால் சமூகம் நீதிமன்றம் இந்த அசல் வழக்கு OS No.100/2019 முடியும்வரை Stay உத்தரவு வழங்கியும், உத்தரவுக்கு பின்பும் இவ்வழக்கின் வாதியானவர் மற்றும் அவரது வகை அடியாட்கள் இடையூறு ஏதும் செய்து வந்தாலும், தாவா நிலத்தில் அத்துமீறி கற்களை ஊன்றி முள்வேலி அமைத்துள்ளதை அகற்றிக் கொடுக்க பழனிசெட்டிபட்டி காவல் ஆய்வாளர் தகுந்த பாதுகாப்பு வழங்கியும் உத்தரவு பிறப்பிக்குமாறு வேண்டப்படுகிறது. இந்நிலையில் நான் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் W.M.P (MD) No.22600/2023 ன்படி மனு தாக்கல் செய்ததில் விசாரணை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பரிகாரம் பெற்றுக் கொள்ளவும் எனவும் உத்தரவாகியுள்ளது.

ஆகையால் சமூகம் கோர்ட்டார் அவர்கள் நான் தாக்கல் செய்துள்ள மனுவை கோப்பிற்கு எடுத்து சீர்தூக்கி பார்த்து விவசாய நிலங்களில் உள்ள தென்னைமரங்கள் அனைத்தும் தண்ணீர் பாய்ச்சாமல் இருப்பதால் பட்டுப்போகாமல் இருக்கவும், எவ்வித இடையூறு இன்றி தண்ணீர் பாய்ச்சவும்,

அசல் வழக்கில் வாதியானவர் மற்றும் அவரது வகை அடியாட்கள் அத்துமீறி அமைத்துள்ள கற்கள் ஊன்றி முள்வேலி அமைத்ததை அகற்றி கொடுக்கும்படியும், வழக்கு முடியும் வரை அமைதியான முறையில் விவசாயம் செய்து வருவதற்கு Stay உத்தரவு வழங்குமாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு</u>

மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாக்கல் செய்திருக்கும் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் / வாதி தன் பெயரிலான பத்திரங்கள் மற்றும் பட்டாக்கள் அடிப்படையிலேயே OS No.100/2019 வழக்கில் தாக்கல் செய்திருந்தார். ஆனால் மேற்படி எதிர்மனுதாரர் / பிரதிவாதிகளின் சொத்துக்களும் தொடர்ச்சியான (Joint Possession) நிலங்களாக இருந்ததால் எதிர்மனுதாரர் / வாதி தன் பாகத்தை தன் பத்திரப்படி பட்டாப்படி தன்னித்து பிரித்து தரும்படி (Separate Possession) பரிகாரம் கோரி அசல் வழக்கில் பரிகாரம் கேட்டிருந்தார்.

இந்நிலையில் எதிர்மனுதாரர் / வாதி தன் பாகத்தை மட்டும் பட்டாப்படியும், பத்திரத்தின்படியும் தனியாக பிரித்து தரும்படி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் மனு தாக்கல் செய்தார். மேற்படி மனுவில் எதிர்மனுதாரர்/ வாதி தேனி வட்டாட்சியாளர் மற்றும் தேனி சர்வேயர் அவர்களையும் எதிர்மனுதாரராக குறிப்பிட்டிருந்தார் அதன்பேரில் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை எதிர்மனுதாரர் / வாதிக்கு தேனி வட்டாட்சியாளர், சர்வேயர் மூலம் எதிர்மனுதாரர் / வாதியின் நில எல்லைகளை அளந்து தரும்படி உத்தரவிட்டிருந்தது. அதன்படி தேனி வட்டாட்சியர் அலுவலகம் மூலம் தக்க அரசு சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்கள் மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு தக்க அறிவிப்பு கொடுத்தது இருதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையிலும், இருதரப்பினர் முன்னிலையிலும் எதிர்மனுதாரர் / வாதியின் நில எல்லைகளைஅளந்து

கொடுத்துள்ளனர். அதன்படி எதிர்மனுதாரர் / வாதி கல் ஊன்றி சுற்றிலும் தன்பாக நிலத்திற்கு மட்டும் கம்பிவேலி அமைத்து தனியாக தன்பாகத்தை தனித்து அனுபவித்து வருகின்றார். ஆனால் மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் மேற்படி நிலத்தை அரசு சர்வேயர் அளவீடு செய்யும்போது எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவிலலை. அதன்காரணமாக எதிர்மனுதாரர் / வாதி தான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 100/2019 வழக்கை வாபஸ் பெற்று கொள்வதாக மனு தாக்கல் செய்தார். அப்போதுதான் மனுதாரர்கள் / பிரதிவாதிகள், எதிர்மனுதாரர் / வாதிக்கு வீண் இடையூறு செய்யும் எண்ணத்தில் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் எதிர்மனுதாரர் / வாதிக்கு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழங்கிய உத்தரவிற்கு எதிராக மனு தாக்கல் செய்தனர். மேற்படி மனுவில் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை எதிர்மனுதாரர் / வாதிக்கு உத்தரவிட்டதை ரத்து செய்யவில்லை. ஆனால், மனுதாரர்கள் / பிரதிவாதிகள் அசல் வழக்கு எண் 100/2019 ல் தக்க பரிகாரம் தேடிக் கொள்ள உத்தரவு வழங்கியுள்ளது.

மேற்படி உத்தரவின்பேரில் மனுதாரர்கள் / பிரதிவாதகள் தாவா மனுவை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாக்கல் செய்திருக்கும் மனுவானது சட்டவிரோதமானதாகும். ஏனெனில் எதிர்மனுதாரர் / வாதி தன் நில பாகத்தை (Separate Possession) எடுத்த பின்பு தனி வேலி அமைத்து பராமரித்து வந்தார். எந்த சூழ்நிலையிலும் மனுதாரர்கள்/ பிரதிவாதிகளின் நில பாகத்திற்குள் எந்தவிதமான அத்துமீறலோ இதுவரை செய்யவில்லை. இனிமேலும் எவ்வித இடையூறும் எதிர்மனுதாரர் / வாதி செய்யப்போவதில்லை. ஆனால் மனுதாரர்கள் / பிரதிவாதிகள், எதிர்மனுதாரர் / வாதிக்கு இடையூறு செய்ய வேண்டும், மனஉளைச்சல் செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளார்.

எதிர்மனுதாரர் / வாதி தான் தாக்கல் செய்த OS No.100/2019 வழக்கை வாபஸ் வாங்க மனு தாக்கல் செய்திருந்தும், மனுதாரர்கள் / பிரதிவாதிகள் அதற்கு ஆட்சேபனை தெரிவித்து இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல. எதிர்மனுதாரர் / வாதி தாக்கல் செய்திருக்கும் அசல் வழக்கில் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் பரிகாரங்கள் கேட்டிருப்பது தவறாகும். மேற்படி மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தனியாக வழக்கு தாக்கல் செய்துதான் பரிகாரம் கேட்க முடியும் அல்லது எதிர்கோருமை மனு தாக்கல் செய்து (Counter Claim) தான் பரிகாரம் கோரமுடியும். மனுதாரர்கள் / பிரதிவாதிகள் கெட்ட எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாக்கல் செய்திருக்கும் மனுவை எதிர்மனுதாரர் / வாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவு வழங்கும்படி பிரார்த்திக்கப்படுகிறது.

4. மனுவில் தீர்வுக்கு உற்ற பிரச்சனை யாதெனில் மனு அனுமதிக்கதக்கதா? என்பதே ஆகும்.

5. **<u>தீர்வு</u>**

எதிர்மனுதாரர் பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனம் கோரி அசல் வழக்கை மனுதாரர்கள் மீது தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கு நிலுவையில் உள்ளபோது, எதிர்மனுதாரர் தனது பிரிவினையில்லாத பாகத்திற்கு கம்பி வேலி அமைத்துள்ளார். அதை அகற்ற வேண்டும். மேலும் மனுதாரர்கள் வழக்கு சொத்தில் உள்ள தென்னைமரங்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதற்கு எதிர்மனுதாரர் இடையூறு ஏற்படுத்தக் கூடாதென கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு சொத்தின் மொத்த பரப்பளவு 21.60 ஏக்கர். அதில் எதிர்மனுதாரர் 6.83 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கியுள்ளார். அதாவது எதிர்மனுதாரர் கூட்டுச் சொத்தை விலைக்கு வாங்கியுள்ளார். அதை எதிர்மனுதாரர் வழக்குரை பத்தி 5ல் சாட்டுரைத்துள்ளார். மேலும் எதிர்மனுதாரரின் விற்பனை ஆவணங்களை பாரிசீலிக்கையில் அவர் வழக்கு சொத்தில் 6.83 ஏக்கர் நிலத்தை கூட்டாக விலைக்கு வாங்கியுள்ளார் என்பது தெரிகிறது. ஆகவே வழக்கு சொத்தில் எதிர்மனுதாரருக்கு கூட்டு பங்குரிமை மட்டுமே உள்ளது. ஆனால் எதிர்மனுதாரர் மாண்பமை மதுரை கிளை சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் தனது கூட்டு பாகமான 6.83 ஏக்கர் நிலத்தை அளந்து அதைச்சுற்றி கம்பிவேலி அமைத்துள்ளார், அதனால் கூட்டு சொத்து உரிமையாளர்களான மனுதாரர்கள் வழக்கு சொத்தில் உள்ள தென்னை மரங்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய முடியவில்லை. அதனால் தென்னைமரங்கள் கருகும் அபாயத்தில் உள்ளது என முதல் மனுதாரர் தனது பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ளார். எதிர்மனுதாரர் தனது கூட்டு பாக நிலத்திற்கு கம்பிவேலி அமைத்துள்ளார் என அவரது எதிருரை பத்தி 3ல் ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் மனுதாரர் கம்பிவேலி அமைத்ததை காட்டும் புகைப்படங்களை ம.சா.ஆ.1 (வரிசை) ஆக குறியீடு செய்துள்ளார். அதை எதிர்மனுதாரர் திட்டவட்டமாக மறுக்கவில்லை. அதனால் எதிர்மனுதாரர் கூட்டு சொத்தில் கம்பிவேலி அமைத்துள்ளார் என்பதை உறுதி செய்ய முடிகிறது. ஆகவே, ஏற்கனவே குறிப்பிட்டவாறு வழக்கு சொத்து முழுவதும் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரரின் கூட்டுச் சொத்து, அதில் எதிர்மனுதாரர் தற்போது தனி உரிமை எதுவும் கோர இயலாது. அசல் வழக்கில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பின்னரே, எதிர்மனுதாரர் தனது பாகத்திற்கு தனித்து உரிமை கோர முடியும். அவ்வாறான நேர்வில், எதிர்மனுதாரர் தனது கூட்டு பாகமான 6.83 ஏக்கர் நிலத்திற்கு கம்பிவேலி அமைத்ததால், அவர் மனுதாரர்களின் கூட்டு உரிமையில் தலையீடு செய்துள்ளார். அதனால் மனுதாரர்கள் தங்களது கூட்டு

சொத்தில் உள்ள தென்னைமரங்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய இயலாமல் தென்னைமரங்கள் கருகும் அபாயத்தில் உள்ளது. ஆகவே, அசல் வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரர் தனது கூட்டு பாக உரிமையை தனித்து கொண்டாட இயலாது. ஆகவே, எதிர்மனுதாரர் தனது கூட்டு பாகமான 6.83 ஏக்கர் நிலத்திற்கு அமைத்துள்ள கம்பிவேலியை உடன் அகற்ற வேண்டும் என முடிவு செய்கிறேன். அதனால் மனுதாரர்களுக்கு தற்காலிக செயலுறுத்துக் கட்டளை கிடைக்கத்தக்கது என மேலும் முடிவு செய்கிறேன். அவ்வாறே மேற்காணும் பிரச்சனை தீர்மானிக்கப்படுகிறது.

**முடிவில்,** மனு செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. எதிர்மனுதாரர் வழக்கு சொத்தில் தனது கூட்டு பாகமான 6.83 ஏக்கர் நிலத்தை சுற்றி அமைத்துள்ள கம்பிவேலியை உடன் அகற்ற அவருக்கு எதிராக தற்காலிக செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்கப்படுகிறது. தவறினால் மனுதாரர்கள் நீதிமன்றத்தின்மூலம் தற்காலிய செயலுறுத்துக் கட்டளையை நிறைவேற்றிக் கொள்ள ஆணையிடுகிறேன். அதற்கான செலவை மனுதாரர்கள் எதிர்மனுதாரரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2024 ம் ஆண்டு மார்ச் திங்கள் 15–ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P GANESAN

Digitally signed by P GANESAN
Date: 2024.03.15 18:31:11 +0530

கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி( முழு கூடுதல் பொறுப்பு),
பெரியகுளம்.

**<u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u>**

மனுதாரர் கம்பிவேலி அமைத்ததை காட்டும்
புகைப்படங்கள் ம.சா.ஆ.1 (வரிசை)

**<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:-**

-இல்லை-

P GANESAN
Digitally signed by P GANESAN
Date: 2024.03.15 18:30:40 +0530

கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி( முழு கூடுதல் பொறுப்பு),
பெரியகுளம்.

கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்
வ.வி.எண்.2/2024
இன்
அ.வ.எண்.100/2019
சீரான/வரைவு ஆணையுரை
நாள். 15.03.2024.